بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

# வாக்களிக்கப்பட்ட மகன் தொடர்பான முன்னறிவிப்பின் மகத்துவம் மற்றும் அதன் பொலிவின் ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 21 பிப்ரவரி 2020 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

அஹ்மதிய்யா ஜமாஅத்தில் பிப்ரவரி 20 ஆம் தேதி முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்பின் அடிப்படையில் குறிப்பாக நினைவு கூறப்படுகிறது. ஜமாஅத்துகளில் முஸ்லிஹ் மவ்வூது பற்றிய கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. நான் முதலிலும் இவ்விஷயம் குறித்து விளக்கம் தந்துள்ளேன். ஆனால் மீண்டும் விளக்கம் தருவது புதிதாக ஜமாஅத்திற்கு வருபவர்கள் மற்றும் குழந்தைகளுக்காகவே ஆகும்.

முஸ்லிஹ் மவ்வூது தினம் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஆகிய முஸ்லிஹ் மவ்வூது உடைய பிறப்பை நினைவு கூருவதற்காகக் கொண்டாடப்படுவதில்லை. மாறாக, ஒரு முன்னறிவிப்பு நிறைவேறியதை நினைவுகூரும் விதத்தில் கொண்டாடப்படுகிறது. அந்த முன்னறிவிப்பை இஸ்லாத்தின் பெருமையை நிலைநாட்டுவதற்காக அல்லாஹ்வுடைய இல்ஹாம் பெற்று மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்திருந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது பிறப்பதற்கு மூன்று ஆண்டுகள் முன்பு இந்த முன்னறிவிப்பு செய்யப்பட்டது. இதில் இஸ்லாத்தின் ஒரு சேவகர் மற்றும் வாக்களிக்கப்பட்ட மகன் பற்றி முன்னறிவிக்கப்பட்டது. அது எதிரிகளுக்கு அடையாளமாக செய்யப்பட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: 20 பிப்ரவரி 1886 –ல் இந்த ஹோஷியார்பூர் நகருக்கு அன்னார் அங்கு சென்றிருந்தார்கள். இந்த ஹோஷியார்பூர் நகரின் இந்த இடத்தில் – அந்த இடத்தில் அன்னார் அப்போது இருந்தார்கள். இந்த இடத்தில் என் எதிரில் எத்தகைய வீடு இருந்தது எனில் அந்த வீடு இருந்த இடம் தவீலா என்றழைக்கப்பட்டது. அதன் பொருள் அது எவரது நிரந்தர தங்குமிடமும் அல்ல. மாறாக ஒரு தலைவரின் அதிகப்படியான வீடுகளில் ஒரு வீடாக அது இருந்தது. சில நேரங்களில் எதிர்பாராத விதமாக விருந்தாளிகள் வந்து விட்டால் அவர்களது தேவைக்கான பொருள்கள் அங்கு வைக்கப்பட்டது.

அங்கு தேவைக்கேற்ப விலங்குகளும் கட்டி வைக்கப்பட்டிருந்தன. ஓர் அடையாளம் தெரியாத மனிதர் அவரை காதியான் மக்கள் கூட முழுமையாக அறிந்திருக்க மாட்டார்கள். மக்களின் எதிர்ப்பைப் பார்த்து பொதுவாகவும் இஸ்லாத்தின் நிறுவுனர் மீது கொண்ட எதிர்ப்பையும் கண்டு அந்த மனிதர், இறைவன் முன்னிலையில் தனித்திருந்த அவனிடம் உதவியும் அடையாளமும் வேண்டி அமர்ந்தார். 40 நாட்கள் மக்களை விட்டு தனித்திருந்து அவர் தனது இறைவனிடம் துஆ வேண்டினார்.

40 நாட்களின் துஆவிற்குப் பிறகு இறைவன் அவருக்கு ஓர் அடையாளம் வழங்கினான். அந்த அடையாளம் என்னவென்றால், நான் உன்னிடம் தந்த வாக்குறுதியை நிறைவேற்றுவது மட்டுமின்றி உனது பெயரை உலகில் எல்லை வரை எட்ட வைப்பேன். இன்னும் சொல்வதாயின், இந்த வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றுவதற்காக உமக்கு ஒரு மகனையும் வழங்குவேன். அவர் சில சிறப்புப் பண்புகளைக் கொண்டவராக இருப்பார். அவர் இஸ்லாத்தை உலகின் எல்லை வரை பரப்புவார். இறை வார்த்தைகளின் அடிப்படையில் புரிய வைப்பார். அவர் இறை அருளின் அடையாளமாக இருப்பார். அவர் மார்க்க மற்றும் உலகியல் அறிவுகள், இஸ்லாத்தைப் பரப்புவதற்கு அவசியமான அறிவுகள் அவருக்கு வழங்கப்படும். எந்த வகையிலாவது அவருக்கு அல்லாஹ் நீண்ட வாழ்நாளை வழங்குவான். எந்த அளவுக்கு எனில், அவர் உலகின் எல்லை வரை பிரபல்யம் அடைவார்.

இந்த மகத்தான மகன் பற்றிய முன்னறிவிப்பைக் கேட்டு எதிரிகள் ஆட்சேபனை செய்யத் தொடங்கினர். இது என்ன முன்னறிவிப்பு? எவர் வேண்டுமானாலும் இவ்வாறு அறிவிக்க முடியும்? எனக்கு ஒரு மகன் பிறப்பான் என்று கூற முடியும் என்றனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு ஒரு மகன் பிறப்பான் என்று மட்டும் கூறினாலும் கூட தன்னளவில் அது ஒரு முன்னறிவிப்பே ஆகும். ஏனெனில் ஒருவர் எவ்வளவு குறையற்றவர் இல்லாவிட்டாலும் கூட அவருக்கு ஒரு குழந்தை கிடைக்கும் என்று கூற முடியாது. இரண்டாவது அறிவிப்பவரின் வயது ஐம்பதை விட அதிகமாக இருந்தார். உலகில் ஆயிரக்கணக்கானோர் இருக்கின்றனர். அவர்களுக்கு 50 வயதுக்கு மேல் குழந்தை வாய்ப்பு அடைபட்டு விடுகிறது. இன்னும் சிலருக்கு பெண் குழந்தைகள் மட்டுமே பிறக்கின்றன. ஆண்

குழந்தைகள் பிறந்தாலும் சிறு வயதிலேயே இறந்து போகின்றன. இந்த எல்லா சந்தேகங்களும் இந்த இடத்தில் இருக்கின்றன.

முதலில் ஒரு மகன் பிறப்பான் என்று தெரிவிப்பது மனித சக்திக்கு உட்பட்டதல்ல. இவ்வளவு ஆட்சேபனைகளையும் தாழ்மையுடன் ஏற்றுக் கொண்டவாறு அன்னார் கூறினார்கள். ஒரு மகன் பிறப்பு பற்றி சொல்வது முன்னறிவிப்பு இல்லை என்பதை ஏற்றுக் கொண்டாலும் கேள்வி என்னவெனில் நான் எப்போது ஒரு மகன் பிறப்பான் என்று செய்தி அறிவித்தேன்? எனக்கு ஒரு மகன் பிறப்பான் என்று நான் கூறவில்லை. மாறாக, நான் கூறியது என்னவென்றால் இறைவன் எனது துஆவை ஏற்றுக் கொண்டு ஒரு வாழ்த்துக்குரிய ஆன்மாவை அனுப்புவதாக வாக்களித்துள்ளான். அவரது உட்புற வெளிப்புற பரக்கத்துகள் உலகில் பரவும் என்றுதான் கூறினேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: முஸ்லிஹ் மவ்வூது என்பவர் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சந்ததியிலிருந்து 300, 400 வருடங்கள் கழித்து தோன்றுவார். அங்கு அன்னாரின் சந்ததியிலிருந்து தோன்றுவார் என்றே கூறப்பட்டது என்றும் ஆனால் தற்போது வரமாட்டார் என்றும் கூறுகிறார்கள். இவர்கள் இறைவனுக்கு அஞ்சுவதில்லை. காரணம் அவர்கள் முன்னறிவிப்பின் சொற்களைப் பார்ப்பதில்லை. அதன் மீது அவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதுகிறார்கள்: இப்போது இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்யப்படுகிறது. இஸ்லாம் தன்னகத்தே அடையாளங்களை வெளிப்படுத்த சக்தி பெற்றிருக்கவில்லை என்று கூறுகின்றனர். இந்த வகையில் இஸ்லாம் உண்மை என்றால் அடையாளம் காட்டுங்கள் பார்ப்போம் என்று பண்டிட் லேக்ராம் ஆட்சேபனை செய்தார். இஸ்லாம் உண்மை எனில் அடையாளம் காட்டுங்கள் என்று இந்தர்மன் ஆட்சேபனை செய்தார். அன்னார் இறைவன் முன் குனிகிறார்கள். ''எனது இறைவா! நீ ஓர் அடையாளம் காட்டுவாயாக. அந்த அடையாளங்கள் மூலம் அடையாளமாக வேண்டுபவர் இஸ்லாத்தை ஏற்க வேண்டும். இந்தர்மன் முராதாபாதி போன்றோர் இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளும் வகையில் அடையாளம் காட்டுவாயாக என்று துஆ செய்தார்கள்.

இந்த ஆட்சேபனை செய்பவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனிடம் துஆ செய்தபோது உமக்கு இன்றிலிருந்து 300 வருடங்கள் கழித்து ஒரு மகனை வழங்குவேன். அவர் மூலம் இஸ்லாத்தின் உண்மையை நிரூபிப்பேன் என்று கூறியதாக கூறுகின்றனர். உலகில் எந்த மனிதனாவது இதனை அறிவுடைய கூற்றாகக் கருத முடியுமா? முழுக்க முழுக்க அறிவற்ற கூற்றாகும்.

பண்டிட் லேக்ராம், முன்ஷி இந்தர்மன் முராதாபாதி மற்றும் காதியானின் இந்துக்கள் எல்லாம் இஸ்லாம் பற்றிய வாதம் அதன் இறைவன் அடையாளம் காட்டக்கூடியவன் என்பது பொய்யான அடிப்படையற்ற வாதமாகும் என்றும் இந்த வாதத்தில் ஏதாவது உண்மை இருந்தால் ஓர் அடையாளம் காட்டுங்கள் என்று கூறுகின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவன் முன் குனிகின்றார்கள். இறைவா! உன்னிடமிருந்து ஒரு ரஹ்மத்தின் அடையாளம் காட்டுவாயாக என்று கேட்கிறார்கள். உன் நெருக்கத்தின் அடையாளம் காட்டுவாயாக என்று கேட்கிறார் எனில் அந்த அடையாளம் விரைவாக கிடைக்க வேண்டும். அதனைப் பார்க்க அவர்கள் உயிருடன் இருக்க வேண்டும் என்று துஆ செய்தார்கள்.

இந்த வகையில் அவ்வாறே நடந்தது. 1889 –ல் எனது பிறப்பு அல்லாஹ்வின் முன்னறிவிப்பிற்கேற்ப நிகழ்ந்தது. அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த அடையாளம் கேட்ட பிறகு அல்லாஹ்வின் அடையாளம் வெளிப்பட்டுக் கொண்டே சென்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வாழ்விலும் இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்தவர்களின் வாழ்நாளிலும் இந்த அடையாளம் வெளிப்படுவது அவசியமாக இருந்தது. மேலும் அது வெளிப்பட்டது.

நான்தான் முஸ்லிஹ் மவ்வூது என்பதைப் பற்றி எடுத்துக் கூறியவாறு அன்னார் கூறுகின்றார்கள்: என்மீது இந்த ஆட்சேபனை செய்யப்படுகிறது. அதாவது இவர் 1944 –ல்தான் அறிவித்தார். முதலிலேயே அறிவிக்கவில்லை என்று ஆட்சேபனை செய்கின்றனர். அன்னார் கூறுகிறார்கள்: நான் கூறுகிறேன். இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்பு உண்மைப்படுத்தக் கூடியவன் நான் தான். நான் இட்டுக்கட்டிக் கூறுகிறேன் என்று கூறுபவர், என் மீது பொய்யைச் சுமத்துபவர் வந்து என்னுடன் முபாஹலா செய்யட்டும். பிறகு இறைவன் எவர் உண்மையாளர்? எவர் பொய்யர்? என்று தானே தனது வானத்து அடையாங்களைக் கொண்டு அறிவிப்பான். ஆனால் எவரும் முன்வரவில்லை.

சுருக்கமாக அல்லாஹ்வின் அருளால் அந்த முன்னறிவிப்பு நிறைவேறுவதற்கு ஒரு நீண்ட காலம் ஆகும் என்று எதிர்பார்த்தனர். அல்லாஹ் அவர்களைக் குறித்து எனக்கு தனது இல்ஹாம் மூலம் தெரிவித்தான். முன்னறிவிப்பு என் மூலம் நிறைவேறி விட்டது. இப்போது இஸ்லாத்தின் எதிரிகள் மீது சான்றுகளை முழுமையாகப் பூர்த்தி செய்து

விட்டான். இஸ்லாம் இறைவனது உண்மை மார்க்கம் என்ற விஷயத்தை வெளிப்படுத்திக் காட்டி விட்டான். அதுபோன்று முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவனது உண்மையான ரஸூல் ஆவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்வினால் உண்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆவார்கள். இஸ்லாத்தைப் பொய்ப்படுத்துபவர்கள்தான் பொய்யர்கள் ஆவர். முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பொய்யர் என்று கூறுபவர்கள் பொய்யர்கள் ஆவர். இறைவன் தனது மகத்தான முன்னறிவிப்பு மூலம் இஸ்லாம் மற்றும் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுடைய உண்மைக்கு ஓர் உயிருள்ள அடையாளத்தை மக்கள் முன் எடுத்து வைத்து விட்டான்.

அன்னார் கூறுகின்றார்கள்: தமக்கு, 1886 ஆம் ஆண்டு அதாவது இன்றிலிருந்து 58 வருடத்திற்கு முன்பாக, ஒன்பது வருடங்களுக்குள்ளாக எனக்கு ஒரு மகன் பிறக்கப் போகிறான் என்று கூற எவருக்காவது ஆற்றல் இருக்கின்றதா? அவர் விரைவாக வளர்வார். உலகின் எல்லைகள் வரை பிரபல்யம் அடைவார். அவர் இஸ்லாம் மற்றும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய பெயரை உலகில் பரப்புவார். அவர் மறைமுகமான வெளிப்படையான அறிவுகளால் நிரப்பப்படுவார். அவர் இறை கம்பீரம் வெளிப்படைக் காரணமாக இருப்பார். இறைவனது வல்லமை மற்றும் நெருக்கம், அருள் உடைய உயிருள்ள அடையாளமாக இருப்பார் என்ற செய்தியை உலகில் எந்த மனிதனும் தன் புறமிருந்து கூற முடியாது. இறைவன் இந்த செய்தியைத் தந்தான். இறைவே அந்த செய்தியை நிறைவேற்றியும் தந்தான்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இது சாதாரண அறிவிப்பு அல்ல. அன்னாரின் 52 வருட காலகட்டத்தின் ஒவ்வொரு நாளும் இந்த அடையாளத்தை வெளிப்படுத்திக் காட்டுகிறது.

அன்னார் கூறுகிறார்கள்: எனது நண்பர்களே! நான் எனக்காக இறைவன் அறிவிக்காத எந்த கண்ணியத்தையும் விரும்பவில்லை. நான் நிறைய ஆயுளைக் கேட்பதாகவும் இல்லை. ஆம்; நான் இறைவனது அருளை எதிர்பார்க்கிறேன். நான் முழுமையாக திட உறுதி கொள்கிறேன். ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) மற்றும் இஸ்லாத்தை நிலைநிறுத்துவதற்காகவும், இஸ்லாத்தை அதன் கால்களில் நிலைநிறுத்துவதற்காகவும், கிறித்தவத்தை ஒழிக்கவும் எனது வருங்கால வாழ்வின் எஞ்சிய பகுதியும் ஷய்த்தானின் தலையை நசுக்கக்கூடிய கிறித்தவத்தை ஒழிக்கின்ற பணியில் எனக்கு மிகுதியான பங்கு இருக்கும் – இன்ஷா அல்லாஹ். கிறித்தவம் தோற்கடிக்கப்படும். உலகில் கிறித்தவத்தை நமது தாக்குதலிலிருந்து காப்பாற்ற எந்த உதவியாளனும் இல்லை. எமது கைகளால் அதற்கு தோல்வி ஏற்படும். இன்ஷா அல்லாஹ்.

அவர்கள் கூறுகிறார்கள்: இப்போது நான் உங்களுக்கு ஒரு நற்செய்தி தருகிறேன். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய முன்னறிவிப்பு செய்த முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்பை இறைவன் உங்கள் முன் நிறைவேற்றி விட்டான். இந்த நிலையில் நான் உங்களிடம் உங்கள் பொறுப்புகள் பற்றியும் கவனமூட்டுகிறேன். உங்கள் மீத அது கடமையாக உள்ளது. உங்களது முதல் கடமையாவது, உங்களிடம் மாற்றத்தை ஏற்படுத்துங்கள். உங்கள் இரத்தத்தின் இறுதி சொட்டு வரை இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் வெற்றிக்காக சிந்துவதற்காக தயாராகுங்கள்.

இறைவன் முன்னறிவிப்பை நிறைவேற்றி விட்டான் என்று நீங்கள் மகிழ்ச்சியடையுங்கள். ஆனால் நீங்கள் உங்களது பொறுப்புகளை விட்டு விடாதீர்கள். இறைவன் எனக்கு கனவில் காட்டினான். நான் வேகமாக ஓடுகிறேன். பூமி எனது கால்களுக்குக் கீழே வேகமாக பின்னால் செல்கிறது. இவ்வாறு இறைவன் என்னிடம் இல்ஹாம் மூலம் நான் விரைவாக முன்னேறுவே என்று செய்தி அறிவித்தான். எனவே எனக்காக விதிக்கப்பட்டதாகும். நான் முன்னேற்றத்தின் பக்கம் வேகமாகச் செல்வேன். அத்துடன் உங்கள் மீதும் ஒரு கடமை உள்ளது. நீங்கள் உங்கள் பாதத்தையும் வேகமாக்குங்கள். சோம்பேறித்தனத்தை விட்டு விடுங்கள். எனது பாதத்துடன் தனது பாதத்தையும் வைப்பவருக்கு வாழ்த்துக்கள். நீங்கள் முன்னேற்றத்தை விரும்பினால் உங்கள் பொறுப்பைச் சரியாகப் புரிந்து அடிக்கு அடி என்னுடன் வாருங்கள். அதன் மூலம் முஹம்மது (ஸல்) அவர்களுடைய கொடியை குஃப்ரின் (மறுப்பின்) இதயத்தில் ஊன்ற வேண்டும். பொய்யை உலகை விட்டு முற்றிலும் துடைத்து விட வேண்டும் – இன்ஷா அல்லாஹ். அவ்வாறே நடக்கும். பூமியும் வானமும் அகன்று விடலாம். ஆனால் இறைவனது வார்த்தை ஒருபோதும் அகன்று விடாது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் நமக்கு வாய்ப்பு வழங்குவானாக. நாம் பணி செய்பவர்களாக இருப்போமாக. முஸ்லிஹ் மவ்வூது தினக் கூட்டம் மட்டுமே நடத்துபவராக இல்லாமல் இருப்போமாக. இஸ்லாத்தின் செய்தியை உலகில் எடுத்து வைப்போமாக. நாம் கூட்டம் நடத்துகிறோம் என்பதில் மட்டும் மகிழ்ச்சி அடையக் கூடியவர்களாக அல்லாமல் உண்மையான முறையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்தப் பணிக்காக அனுப்பப்பட்டார்களோ அந்தப் பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்பவர்களாக நாம் திகழ வேண்டும். அதற்காக அன்னார் எண்ணற்ற முன்னறிவிப்பையும் செய்துள்ளார்கள். அதில் ஒன்றுதான் முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்பாகும்.

அன்னாரது பணிகளில் ஒரு பணியை மட்டும் கூறுகின்றேன். வெளிப்படையான மறைமுகமான அறிவுகளால் நிரப்பப்படுவார் என்பதும் ஒரு முன்னறிவிப்பாகும். அதன் ஒரு பொலிவை உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய நூல்கள் சொற்பொழிவுகளின் தொகுப்பு அன்வாருல் உலூம் என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. இதுவரை அன்வாருல் உலூம் 26 தொகுதிகள் வெளிவந்து விட்டன.

குத்பாத்தே மஹ்மூது இதுவரை 39 தொகுதிகள் வெளிவந்து விட்டன. இதில் 1959 வரையுள்ள குத்பாக்கள் வெளிவந்து விட்டன. மொத்தம் 2367 பக்கங்கள் ஆகும்.

தஃப்ஸீரே ஸகீர் 1071 பக்கங்கள் கொண்டவை. தஃப்ஸீரே கபீர் 10 தொகுதிகளைக் கொண்டது. இதில் திருக்குர்ஆனின் 59 சூராக்களுக்கு தஃப்ஸீர் செய்யப்பட்டுள்ளது. தஃப்ஸீரே கபீர் 10 தொகுதிகளைச் சேர்த்து 5907 பக்கங்கள் உள்ளன. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய தஃப்ஸீர் தற்போது வரை அச்சிட்டு வெளியிடப்படாத ஆனால் Research Cell தற்போது கம்போஸ் செய்த பிறகு அதனை ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷனிடம் ஒப்படைத்து விட்டது. அது 3094 பக்கங்கள் உள்ளன. அதற்குப் பிறகு இப்போது Research Cell துறையிடம் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய எழுத்துக்கள் மற்றும் பேச்சுக்களில் இருந்து குர்ஆன் விளக்கங்களை ஒன்று சேர்க்குமாறு நான் கூறியிருந்தேன். அப்பணி தொடங்கி உள்ளது. அது 9000 பக்கங்கள் ஆகிவிட்டது. இன்னும் பணி தொடர்ந்து நடக்கிறது.

இது அன்னாரின் பணிகள் குறித்த சுருக்கமான ஆய்வாகும். மேலோட்டமாக உங்களுக்கு இதனை வைத்து விட்டு முடித்துக் கொள்கிறேன். அல்லாஹ்வின் ஆயிரக்கணக்கான ரஹ்மத்துகள் அவர்கள் மீது உண்டாகட்டும். ஒவ்வொரு பொழுதிலும் அன்னாரின் தகுதியை உயர்த்திக் கொண்டே செல்வானாக. மேலும் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இந்த மகன் போன்று இஸ்லாத்தைப் பரப்புவதில் ஒரு வலிமை உள்ளத்தில் உருவாக்குவோமாக. இஸ்லாத்தின் தொண்டிற்காக எப்போதும் தயாராக இருப்போமாக. மார்க்கத்திற்கு தொண்டாற்றாதவர்களுடன் இல்லாமல் இருப்போமாக. முஸ்லிஹ் மவ்வூது யாரைக் குறித்து உங்கள் காலத்தில் இந்த இயக்கம் கெட்ட பெயருக்கு ஆளாகி விட வேண்டாம் என்று கூறினார்களோ அவர்களைப் போன்று ஆகாமல் இருப்போமாக. நான் இந்த இயக்கத்திற்கு கெட்ட பெயர் ஏற்படுத்துபவராக அன்றி இயக்கத்திற்காக மேலும் மேலும் தொண்டு செய்பவர்களாக இருப்போமாக.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: தொழுகைக்குப் பிறகு இரு காயிப் ஜனாஸா தொழ வைப்பேன். ஒன்று, கண்ணியத்திற்குரிய மர்யம் சாஹிபா. இவர்கள் முல்தானின் தலைவர் மற்றும் முல்தானின் முன்னாள் அமீர் சாஹிப் கண்ணியத்திற்குரிய முல்க் உமர் அலி கோஹர் சாஹிப் அவர்களது இரண்டாவது துணைவியார் ஆவார். இவர் தமது 86 வயதில் விபத்தினால் வஃபாத் ஆகிவிட்டார். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

இரண்டாவது ஜனாஸா நேசத்திற்குரிய ஜாஹித் பாரிஸ் அஹ்மது ஆவார். 12 வயதில் வஃபாத் ஆகிவிட்டார். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

அல்லாஹ் தனது நெருக்கத்தில் இவர்களுக்கு இடமளிப்பானாக. அந்தஸ்தை உயர்த்துவானாக. பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக.

**மொழியாக்கம்: முஅல்லிம் நிஜாமுத்தீன்**